**TAMIL NADU POLICE**
INTEGRATED INVESTIGATION FORM-I

# FIRST INFORMATION REPORT
## முதல் தகவல் அறிக்கை

~~(Under Section 154 Cr.P.C.)~~
~~(கு.ந.வி.தொ.பிரிவு 154 இன் கீழ்)~~
Under Section 173 BNSS

C 8167228

1. District : Salem
மாவட்டம்
PS: V & AC
காவல்நிலையம்
Year: 2025
ஆண்டு
FIR No.: 01/AC/2025
மு.த.அ. எண்
Date: 29.01.2025
நாள்

2. (i) Act சட்டம்: The Prevention of — Sections பிரிவுகள்: 7(a)
(ii) Act சட்டம்: Corruption Act 1988 — Sections பிரிவுகள்:
(iii) Act சட்டம்: as amended in 2018 — Sections பிரிவுகள்:
(iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day :
குற்ற நிகழ்வு நாள்
Date from :
நாள் முதல்
Date to :
நாள் வரை
1) 06.01.2025 at about 11.15 Hrs
2) 10.01.2025 at about 11.15 Hrs
3) 25.01.2025 at about 11.15 Hrs

Time Period :
நேர அளவு
Time from :
நேரம் முதல்
Time to :
நேரம் வரை

(b) Information Received at PS. Date :
காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் 29.01.2025
Time : 10.00 Hrs
நேரம்

(c) General Diary Reference : Entry No(s)
பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் Vol. 2 29.01.2025
Time : 10.00 Hrs
நேரம்

4. Type of Information : Written/ Oral :
தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக — Computer typed Complaint

5. Place of Occurrence (a) Direction and Distance from PS:
குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு துாரமும், எத்திசையும் — About 70 km South East

Beat Number :
முறைக் காவல் எண்
(b) Address :
முகவரி — Taluk Office, Gangavalli, Salem Dt.

(c) In case outside limit of this Police Station, then the Name of P.S :
இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர்
District : —
மாவட்டம்

6. Complainant /Informant (a) Name : Tmt. D. Manjula
குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர்
(b) Father's/ Husband's Name : Dhanraj
தந்தை / கணவர் பெயர்

(c) Date / Year of Birth : Age 41
நாள் / பிறந்த ஆண்டு
(d) Nationality : Indian
நாட்டினம்
(e) Passport No. : —
வெளிநாட்டு கடவுச்சீட்டு எண்

Date of Issue : —
வழங்கப்பட்ட நாள்
Place of Issue : —
வழங்கப்பட்ட இடம்

(f) Occupation : Agriculture
தொழில்
(g) Address : Door No. 2/100, Kudi Street, Masakalipatty, Rasipuram, Namakkal Dt.
முகவரி

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary)
தெரிந்த / ஐயப்பாட்டிற்குறிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள்
(தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)

Tr. Balakrishnan, Tahsildar, Gangavalli Taluk, Salem Dt.

8. Reasons for delay in reporting by the complainant / Informant:
குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்

—

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

—

10. Total value of properties stolen / involved :
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு —

11. Inquest Report / Un-natural death Case No. if any:
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால் —

12. FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

Submitted :

Enclosed in a Separate Sheet.

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed ..................... Rank ..................... to take up the Investigation / Refused Investigation / transferred to PS..........................................on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் ............................ பதவி ..................... நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு .......................................... காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் /
பெருவிரல் இரேகைப் பதிவு D. Majula

Signature of the Officer in-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்
[signature] 29/01/25

15. Date & Time of despatch to the court:
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும் 29/1/25

29.01.2025
12.00 Hrs

Name: பெயர் M. Subashini
Rank: நிலை .....................No. எண் ..........
Dy. Supdt. of Police,
V&AC, Namakkal.
i/c Salem.

**சேலம் மாவட்ட ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு குற்ற எண்.01/AC/2025 u/s. 7(a) of the Prevention of Corruption Act, 1988 as amended in 2018-ன்படி பதிவு செய்யப்பட்ட முதல் தகவல் அறிக்கையின் வரிசை எண்.12-ன் தொடர்ச்சி...**

**பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது:** 29.01.2025-ஆம் தேதி புதன்கிழமை காலை சுமார் 10.00 மணிக்கு நாமக்கல் ஊழல்தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு காவல் துணைக் கண்காணிப்பாளர் பொறுப்பு சேலம் ஆகிய நான் சேலம் ஊழல்தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு நிலைய அலுவலில் இருந்தபோது, D.மஞ்சுளா, க/பெ.தன்ராஜ், க.எண்.2/100, குடி தெரு, மசக்காளிபட்டி, இராசிபுரம், நாமக்கல் மாவட்டம் என்பவர் நிலையம் ஆஜராகி கொடுத்த கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு பிரிண்ட் எடுக்கப்பட்ட புகாரின் விபரம் பின்வருமாறு:- அனுப்புதல்: D.மஞ்சுளா, க/பெ.தன்ராஜ், க.எண்.2/100, குடி தெரு, மசக்காளிபட்டி, இராசிபுரம், நாமக்கல் மாவட்டம், பெறுதல்: காவல் துணைக் கண்காணிப்பாளர் அவர்கள், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு துறை, சேலம் மாவட்டம், ஐயா, நான் மேற்கண்ட முகவரியில் குடும்பத்துடன் வசித்துவருகிறேன். நான் பிறந்த ஊர் கெங்கவல்லி வட்டம், தம்மம்பட்டி கிராமம். எனது அப்பா நடேசன் இறந்துவிட்டார். எனது அம்மா பாக்கியம் கெங்கவல்லியில் வசித்து வருகிறார். எனது உடன் பிறந்த அக்கா ரேவதி, தலைவாசலில் அவரது கணவருடன் வசித்து வருகிறார். எங்க அப்பா வழி பூர்வீக சொத்து சுமார் 7 ஏக்கர் தம்மம்பட்டி கிராமம் சர்வே எண்.29/3A, 3B மற்றும் 29/2B1, 2A ஆகியவற்றில் உள்ளது. அதற்கு ஒட்டினாற்போல் வடபுரம் சர்வே எண்.29/1B1, 1B2 இல் சுமார் 15 அடிஅகலத்தில் நீரோடை சென்றது. அந்த நீரோடையை ஒட்டினாற்போல் உள்ள நிலத்தின் உரிமையாளர் J.R.மணி மற்றும் அவரை சார்ந்தவர்கள் ஆக்கிரமிப்பு செய்து அதை மூடி வழித்தடமாக மாற்றிவிட்டார்கள். அதனால் மழைகாலத்தில் எங்களது நிலத்தில் இருந்து தண்ணீர் வெளியேற வழி இல்லாமல் உள்ளது. அந்த ஆக்கிரமிப்பை அகற்றி நீர் ஓடையை மீட்க 28.05.2024-ல் கெங்கவல்லி வட்டாட்சியர் அவர்களிடம் மனு கொடுத்தேன். அதன் மீது அவர் நடவடிக்கை எடுக்காததால், எங்கள் ஊரைச் சேர்ந்த வக்கில் திரு.ராஜகோபால் மூலமாக சென்னை உயர்நீதிமன்றத்தில் W.P.No.27782/2024 படி மனு தாக்கல் செய்யப்பட்டு அதன் மீது விசாரணை மேற்கொண்ட நீதியரசர்கள் கடந்த 18.09.2024 அன்று எனது மனு மீது 12 வார காலத்திற்குள் நடவடிக்கை எடுக்க சேலம் மாவட்டம் கெங்கவல்லி வட்டாட்சியர் அவர்களுக்கு உத்தரவு பிறப்பித்தார்கள். அதன்பின் சென்னை உயர்நீதிமன்ற உத்தரவை இணைத்து சேலம் கெங்கவல்லி வட்டாட்சியர்

அவர்களிடம் மனு கொடுத்தேன். பின்னர் கெங்கவல்லி வட்டாட்சியர் திரு.பாலகிருஷ்ணன் அவர்கள் கடந்த 07.10.2024-அன்று இருதரப்பினருக்கும் சம்மன் அனுப்பி 10.10.2024 அன்று விசாரணை மேற்கொண்டார்கள். ஆனால் அதன் பின்னர் எந்த ஒரு நடவடிக்கையும் எடுக்கவில்லை. மனு கொடுத்த நாள் முதல் பலமுறை கெங்கவல்லி வட்டாட்சியர் அவர்களை நேரில் சந்தித்து என் மனுமீது நடவடிக்கை மேற்கொண்டு ஆக்கிரமிப்பை அகற்ற கேட்டு வந்தேன். மேலும் இதுசம்பந்தமாக சேலம் மாவட்ட ஆட்சியர் மற்றும் ஆத்தூர் வருவாய் கோட்டாட்சியர் அவர்களிடமும் மனு கொடுத்தேன். மேலும் எங்க நிலத்திற்கான UDR FMB அளவீட்டில் உள்ள தவறுகள் சம்பந்தமாக சேலம் மாவட்ட வருவாய் அலுவலர் அவர்களிடம் மேல்முறையீடு மனு கொடுத்தேன். அந்த மனு ஆத்தூர் வருவாய் கோட்டாட்சியர் அவர்களுக்கு நடவடிக்கைக்காக அனுப்பப்பட்டது. அந்த மனு சம்பந்தமாக அறிக்கை கேட்டு வருவாய் கோட்டாட்சியர் அவர்கள் கெங்கவல்லி வட்டாட்சியர் அவர்களுக்கு தபால் அனுப்பினார். எனது மனுக்கள் சம்பந்தமாக நடவடிக்கை எடுக்க கேட்டு கடந்த 06.01.2025 அன்று மாலை சுமார் 6.15 மணி அளவில் கெங்கவல்லி வட்டாட்சியர் திரு.பாலகிருஷ்ணன் அவர்களை நானும் எனது வக்கில் திரு.ராஜகோபால் அவர்களும் நேரில் சென்று சந்தித்தபோது, வட்டாட்சியர் திரு.பாலகிருஷ்ணன் அவர்கள் UDR விசயம் பின்னர் பார்த்துக்கொள்ளலாம், நீர்ஓடை சம்பந்தமான உத்தரவு தயாராகி வருகிறது, சும்மா வெரும் கையில் வந்தால் எப்படி, என்னை தனியாக கவனித்தால் உத்தரவு போட்டுவிடலாம் என்று சொன்னார். நாங்கள் பார்த்து செய்துகொடுங்க என்று சொல்லிவிட்டு வந்துவிட்டோம். பின்னர் மீண்டும் 10.01.2025 அன்று மாலை சுமார் 4.15 மணியளவில் நானும், வக்கீல் ராஜகோபால் அவர்களும் வட்டாட்சியர் அவர்களைஅவரது அலுவலகத்தில் சந்தித்து எங்கள் மனு சம்பந்தமாக எடுத்த நடவடிக்கை குறித்து கேட்டபோதும் ஏற்கனவே சொன்னதுதான் ரூ.10,000/-மாவது கொடுங்கள் உத்தரவு போட்டுவிடலாம் என்று சொன்னார். எனக்கு பணம் கொடுக்க விருப்பம் இல்லை. மீண்டும் 23.01.2025-ஆம் மாலை சுமார் 5 மணிக்கு நானும், வக்கீல் ராஜகோபால் அவர்களும் கெங்கவல்லி தாலுக்கா அலுவலகம் சென்றோம். அப்போது வட்டாட்சியர் திரு.பாலகிருஷ்ணன் அலுவலகத்தில் இல்லை. அங்கிருந்த அலுவலர்கள் வட்டாட்சியர் வெளியில் சென்றுள்ளார் வந்துவிடுவார் என்று சொன்னதால், காத்திருந்தோம். மாலை சுமார் 06.15 மணிக்கு வட்டாட்சியர் அவர்கள் அலுவலகம் வந்தார். எங்களை பார்த்த அவர் காத்திருக்கும்படி கூறிவிட்டு மற்ற அலுவல்களை கவனித்துக்கொண்டிருந்தார்,

பின்னர் மாலை சுமார் 07.15 மணிக்கு எங்களை அழைத்து பேசினார். அப்போது நாங்கள் நீதிமன்ற உத்தரவு வந்து மூன்று மாதங்களுக்கு மேல் ஆகிவிட்டது ஆகையால் நீதிமன்ற உத்தரவுப்படி நீர்ஓடை ஆக்கிரமிப்பு சம்பந்தமாக விரைந்து நடவடிக்கை எடுங்கள் என்று கேட்டபோது உத்தரவு எல்லாம் தயாராகத்தான் உள்ளது, நான் சொன்னபடி ரூ.10,000/- கொடுங்கள், உத்தரவு போட்டு அடுத்த நடவடிக்கை எடுக்கலாம் என்று வட்டாட்சியர் சொன்னார். தற்பொழுது பணம் எதுவும் என்னிடம் இல்லை என்று சொன்னேன். சரி நானும் கொஞ்சம் பிசியாகத்தான் உள்ளேன், நீங்க கேட்ட பணத்தை ரெடிபண்ணிட்டு அடுத்தவாரத்தில் ஒரு நாள் வாங்க என்று சொன்னார். எனக்கு எங்களது நிலத்தின் வழியாக சென்ற நீர் ஓடையில் உள்ள ஆக்கிரமிப்பை உயர்நீதிமன்ற உத்தரவுப்படி நீக்குவதற்கு உத்திரவு பிறப்பிக்க கெங்கவல்லி வட்டாட்சியர் திரு.பாலகிருஷ்ணன் அவர்களுக்கு லஞ்சமாக பணம் கொடுக்க விருப்பமில்லை. எனவே அவர் லஞ்சமாக கேட்ட ரூ.10,000/- பணத்துடன் இன்று கெங்கவல்லி வட்டாட்சியர் அவர்களை நான், வக்கீல் ராஜகோபால் அவர்களுடன் சென்று சந்திக்க உள்ளேன். எனவே கெங்கவல்லி வட்டாட்சியர் திரு.பாலகிருஷ்ணன் அவர்கள் மீது சட்டப்படி நடவடிக்கை எடுக்க கேட்டுக்கொள்கிறேன். இடம்:சேலம், தேதி:29.1.2025, இப்படிக்கு (ஒப்பம்/-xxxxxx (D.Manjula) 29/1/25.

Sir, Received the above computer typed report on 29.01.2025 at 10.00 Hrs. The genuineness of the informant was verified through sources and found to be genuine and the integrity and antecedents of the accused were also verified through sources and found to be not good. Hence, I obtained oral concurrence from the Directorate of Vigilance and Anti-Corruption and registered a case in Salem Vigilance and Anti-Corruption Cr.No.01/AC/2025 u/s 7 (a) of the Prevention of Corruption Act, 1988 as amended in 2018 on 29.01.2025 at 11.00 hrs. Sd xxxx (M.Subashini) 29.01.2025, Deputy Superintendent of Police, V & AC, Namakkal i/c Salem.

பதிவு செய்யப்பட்ட முதல் தகவல் அறிக்கையின் அசல், புகார்தாரரின் புகார் மனு ஆகியவற்றை கனம் சிறப்பு நீதிபதி, ஊழல் தடுப்பு சட்ட வழக்குகளுக்கான சிறப்பு நீதிமன்றம், சேலம் அவர்களுக்கும் மற்ற நகல்களை சம்பந்தப்பட்ட உயர்

அதிகாரிகளுக்கும் அனுப்பி வைத்து இவ்வழக்கினை விசாரணைக்கு எடுத்துக்கொண்டேன்.

(M.சுபாஷினி)
காவல் துணைக்கண்காணிப்பாளர்,
ஊழல்தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு,
நாமக்கல் (பொ) சேலம்.